07.08.15

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## பாசனத்திற்கு நீர் திறப்பால் குறைகிறது வைகை அணை நீர்மட்டம்



ஆண்டிபட்டி: பாசனத்திற்கு தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் வைகை அணை நீர் மட்டம் குறைந்து வருகிறது.மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் முதல்போக பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து ஜூலை 15 முதல் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. ஜூலை 15 ல் அணையின் நீர் மட்டம் 51.57 அடியாகவும், நீர் வரத்து வினாடிக்கு 815 கன அடியாகவும் இருந்தது. வைகை அணை நீர் பிடிப்பு பகுதியான வருஷநாடு மலைப்பகுதியில் மழை இல்லை. போடி கொட்டக்குடி ஆறு, தேனி முல்லை ஆறுகளில் இருந்தும் வைகை அணைக்கு நீர் வரத்து தற்போது இல்லை. கம்பம் பள்ளத்தாக்கு பகுதியின் பாசனத்திற்கு பெரியாறு அணையில் இருந்து

திறக்கப்பட்டுள்ள நீரில் குறிப்பிட்ட அளவு மட்டுமே தற்போது வைகை அணைக்கு சென்று சேர்கிறது.பாசனத்திற்கு தொடர்ந்து நீர் வெளியேற்றப்படுவதால் அணையின் நீர் மட்டம் குறைந்து வருகிறது. ஆகஸ்ட் 3 ல் 52.17 அடியாக இருந்த நீர் மட்டம் நேற்று 51.71 அடியாக குறைந்தது. அணையின் மொத்த உயரம் 71 அடி. அணைக்கான நீர் வரத்து நேற்று வினாடிக்கு 683 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் பாசனத்திற்கு வினாடிக்கு 900 கனஅடியும், மதுரை, ஆண்டிபட்டி-சேடபட்டி குடிநீர் திட்டத்திற்காக வினாடிக்கு 60 கன அடியும் வெளியேற்றப் படுகிறது. வைகை அணை நீர் பிடிப்பு பகுதிகளில் மழைக்கான அறிகுறிகள் இல்லை. இதனால் குறைந்து வரும் வைகை அணை நீர் மட்டம் விவசாயிகளுக்கு கவலை ஏற்படுத்துவதாக உள்ளது.--

## இலையாக உருமாறும் மல்லிகைப் பூ வினோத வைரசால் விவசாயி அதிர்ச்சி



காந்திகிராமம்: திண்டுக்கல் பகுதியில் வினோத வைரஸ் நோயால் மல்லிகை பூக்கள் இலையாக உருமாறுகின்றன. இதனால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

திண்டுக்கல், ஏ.வெள்ளோடு, பெருமாள்கோவில்பட்டி, ஆத்தூர், கொடைரோடு உள்ளிட்ட பகுதிகளில் 2000 ஏக்கரில் மல்லிகை சாகுபடியாகிறது. இங்கு விளையும் பூக்கள் திண்டுக்கல், நிலக்கோட்டை மார்க்கெட்டில் விற்பனையாகின்றன. சமீபகாலமாக இப்பகுதியில் வினோத வைரஸ் நோய் பரவி வருகிறது. இந்நோய் தாக்கிய செடிகளில் மல்லிகை மொட்டுகள் பச்சை நிறமாக மாறி, பின் இலையாக உருமாறுகின்றன.

இந்நோய் வேகமாக பரவுவதால் பல ஏக்கரில் மல்லிகை பாதிக்கப்பட்டுள்ளது. மருந்து தெளித்தும் கட்டுப்படாததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.பெருமாள்கோவில்பட்டி விவசாயி ஏ.ஜான்சாமுவேல் கூறுகையில், "50 சென்டில் மல்லிகை சாகுடி செய்தேன். 2 மாதங்களுக்கு முன் ஒரு செடியில் மட்டும் நோய் வந்தது. தற்போது அனைத்து செடிகளுகும் பரவிவிட்டது. ரூ.10 ஆயிரத்திற்கு மருந்து தெளித்தும் பயனில்லை. இதனால் பலத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது," என்றார்.காந்திகிராம வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் கூறியதாவது: உருமாறும் நோய் 'பைட்டோபிளாஸ்மா' கிருமியால் உண்டாகிறது. இதனை சாறுஉறிஞ்சும் பூச்சிகள் வேகமாக பரப்பும். இவற்றை கட்டுப்படுத்த ஊடுருவி பரவி மருந்துகள் மற்றும் வேம்பு சார்ந்த பொருட்களை தெளித்தால் ஓரளவு கட்டுப்படும். நோய் பாதித்த செடிகளை அகற்றுவதே சிறந்தது, என்றார்.

## விவசாய நிலங்களில் மண்ணரிப்பு மண்வள ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை

ஊட்டி :'நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாய நிலங்களில் ஆண்டுக்கு, 39 டன் அளவுக்கு மண் அரிப்பு ஏற்படுகிறது' என, தேசிய மண்வள

ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில், 18 ஆயிரத்து 285 ஏக்கர் பரப்பளவில் பலவகை காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகின்றன. 'இந்த தோட்டங்களில், சமீப காலமாக மண்ணரிப்பு அதிகரித்து வருகிறது' என, தேசிய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு, ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டி மையத்தினர் கண்டறிந்து உள்ளனர்.தேசிய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு, ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டி மைய முதன்மை விஞ்ஞானி மணிவண்ணன் கூறியதாவது:சரிவான பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் படிமட்டங்கள், வரப்புகள் அமைக்கப்பட வேண்டும். படிமட்டங்களில், புற்கள், தாவரங்களை நட்டு வைப்பதன் மூலம், மண்ணரிப்பு தடுக்கப்படும்.

1960ம் ஆண்டுகளில், நீலகிரியில் உள்ள விவசாய நிலங்களில் படிமட்டங்கள் அமைக்க, சிறப்பு நிதி கூட ஒதுக்கப்பட்டது. தற்போது விவசாயிகள், தங்கள் தோட்டங்களில் படிமட்டங்களை அமைத்துக் கொள்வதில்லை.உருளைக் கிழங்கு, கேரட் தோட்டங்களில், ஆண்டுக்கு இரு முறை சாகுபடி செய்வதன் மூலம், ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பில், 39 டன்னுக்கு மேல் மண் அரிக்கப்படுகிறது. விவசாய நிலத்தின் மேல் மண்ணில் உள்ள நைட்ரேட், பாஸ்பரஸ், பொட்டாசியம் ஆகிய சத்துகள் இழக்கின்றன. இதனால் மண் வேகமாக மலடாகி வருகிறது. விவசாய நிலத்தில் படிமட்டம் அமைக்க மானிய உதவிகளை, விவசாயிகளுக்கு அரசு வழங்க வேண்டும் என, பரிந்துரை வழங்கியுள்ளோம்.இவ்வாறு, அவர் கூறினார்.

## மாடி தோட்டத்தில் பயிரிட 11 லட்சம் காய்கறி செடிகள் தயார்:மானிய விலையில் வழங்க தோட்டக்கலை துறை முடிவு

செங்கல்பட்டு:காஞ்சிபுரம் மாவட்டத் தில், மாடி தோட்டத்தில் பயிரிட, கக லட்சம் காய்கறி செடிகள் தயார் நிலையில் உள்ளன. அவற்றை, மானிய விலையில் வழங்க, தோட்டக்கலை துறை முடிவு செய்துள்ளது.காஞ்சிபுரம் மாவட்டத்தில், செங்கல்பட்டு, ஆத்துார், மேல்கதிர்பூர், மேல் ஒட்டிவாக்கம், விச்சந்தாங்கல், பிச்சிவாக்கம் ஆகிய பகுதிகளில், அரசு தோட்டக்கலை பண்ணைகள் உள்ளன. இவற்றில், மா ஓட்டு கன்றுகள், கொய்யா மற்றும் மலர் வகை செடிகள், அலங்கார செடிகள், பூச்செடி கள் வளர்க்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குழி தட்டுகளில்...தற்போது, காஞ்சி புரம், விழுப்பும் மாவட்டம் மற்றும் சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு, மாடி தோட்டத்தில், ஆடி பட்டம், தை பட்டத்தில் பயிர் செய்ய, கத்தரி, தக்காளி, மிளகாய் ஆகிய எட்டு லட்சம் செடிகள் வழங்க, முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதற்காக, ஆத்துார் பண்ணையில், 3 லட்சம் செடிகள்; மேல்கதிர்பூர், மேல் ஒட்டிவாக்கம், விச்சந்தாங்கல், பிச்சிவாக்கம் ஆகிய பண்ணைகளில், தலா 2 லட்சம் செடிகள் என, 11 லட்சம், கத்தரி, மிளகாய், தக்காளி செடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த வீரிய ஒட்டு ரக காய்கறி செடிகளை, குழி தட்டுகளில் உற்பத்தி செய்து, நிழல்விலை குடிலில் வைத்து

பராமரித்து, விவசாயிகளுக்கும், பகுதிவாசி களுக்கும் வழங்குவதற்காக, நடவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.இவை, 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகின்றன. ஒரு செடி, ஒரு ரூபாய் 50 காசுக்கு விற்பனை செய்யப் படுகிறது.5 பண்ணைகளில்... இதற்கான பணிகள், அனைத்து

பண்ணைகளிலும் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இந்த பண்ணைகளில், வரும் 21ம் தேதியிலிருந்து காய்கறி செடிகள் விற்பனை செய்யப்படும். இதையடுத்து, விவசாயிகள் மற்றும் பகுதிவாசிகள் வாங்கி செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இதுகுறித்து, தோட்டக்கலை உதவி இயக்குனர் ராணி கூறுகை யில், 'காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஐந்து பண்ணைகளில், கத்தரி, தக்காளி, மிளகாய் செடிகள் 11 லட்சம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த செடிகள், 20ம் தேதிக்குள் நன்றாக வளர்ந்து விடும். இதனால், வரும் 21ம் தேதி, சென்னையில் விற்பனை செய்யப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டம் மட்டுமின்றி, விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் வாங்கி செல்லலாம்' என்றார்.

## மழை பொய்த்ததால் சாகுபடி நிறுத்தம்

வாலாஜாபாத்:பருவ மழை பொய்ப்பு காரணமாக, தென்னேரி ஏரி பாசனம் பெறும் விவசாய நிலங்களின் சாகுபடி பரப்பளவு, அதல பாதாளத்தில் குறைந்தது என, விவசாயிகள் குற்றம்சாட்டி வருகின்றனர். வாலாஜாபாத்தில் இருந்து சுங்குவார்சத்திரம் செல்லும் சாலையில்,

மிகப்பெரிய ஏரி உள்ளது. இந்த ஏரி, 18 அடி ஆழமும்; 5,858 ஏக்கர் சாகுபடி பரப்பும்; 1,106.73 மில்லியன் கன நீரை தேக்கி வைக்கக் கூடிய திறனும்; 12 கி.மீ., நீர்வரத்து கால்வாயையும் உடையது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த 2012ம் ஆண்டில் இருந்து, கடந்த ஆண்டு வரையில் சராசரியாக, 807 மி.மீ., மழை அளவு மட்டுமே மாவட்டத்தில் பதிவு ஆகி உள்ளது. அவ்வாறு இருப்பினும், கடந்த 2013ம் ஆண்டு, தென்னேரி ஏரியில், 7 கன அடி தண்ணீர் மட்டுமே நிரம்பி இருந்தது. 2014ம் ஆண்டு, 2 அடி தண்ணீர் மட்டுமே இருப்பு இருந்ததால், நவரை பட்டத்தில், முற்றிலும் பயிரிடப்படவில்லை என, ஏரி நீர் பாசன

சங்க நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். ஏரி நீரை பாசனத்திற்கு பயன் படுத்தி, 5,858 ஏக்கரில் பயிரிடப்பட்ட இடத்தில், தற்போது நிலங்கள் தரிசாக இருப்பது; நீர்வரத்துக் கால்வாய் மற்றும் ஏரி சரியான முறையில், துார் வாராதது மற்றும் பருவ மழை குறைவே காரணம் என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## ரூ.14 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல் : நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, நடந்த பருத்தி ஏலத்தில், 14 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், 1,000 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,122, குறைந்த பட்சம், 3,900 ரூபாய், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4, 451 , குறைந்த பட்சம், 3,987 ரூபாய்க்கு ஏலம் போனது. அதேபோல், சுரபி ரகம் அதிக பட்சம், 6,601, குறைந்த பட்சம், 5,420 ரூபாய்க்கு ஏலம் போனது.நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 1,000 மூட்டை பருத்தி, 14 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளை சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## ஆடி வெள்ளியை முன்னிட்டு பூக்கள் விலை கிடுகிடு உயர்வு

ப.வேலூர் : ஆடி வெள்ளியை முன்னிட்டு, பூக்கள் விலை இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. இது பயிரிட்ட விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

பரமத்தி, ப.வேலூர், பாண்டமங்கலம், கபிலர்மலை, பொத்தனூர், ஜேடர்பாளையம் மற்றும் கரூர் மாவட்டம் சேமங்கி ஆகிய பகுதிகளில், மல்லிகை, சம்பங்கி, அரளி ஆகிய பூக்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பூக்கள், ப.வேலூரில் உள்ள தினசரி மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்பட்டு, ஏலம் விடப்படுகிறது.தற்போது, ஆடி மாதம் என்பதால் பூக்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த மக்கள், தங்கள் பகுதியில் உள்ள மாரியம்மன், பகபதி அம்மன் உள்ளிட்ட கோவில்கள் மற்றும் அவரவர் குல தெய்வ கோவில்களில் வழிபாடு செய்து வருகின்றனர்.குறிப்பாக, ஆடி வெள்ளிக்கிழமைகளில் அபிஷேகம், அர்ச்சனை நடக்கிறது. தொடர்ந்து, ஸ்வாமி சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிப்பது வழக்கம். அதனால், தற்போது பூக்கள் விலை அதிகரித்து உள்ளது. வியாபாரிகளும் போட்டி போட்டி பூக்களை ஏலம் எடுத்தனர்.அதன் காரணமாக பூக்கள் விலை இரண்டு மடங்கு உயர்ந்தது. கடந்த வாரம், கிலோ, 100க்கு விற்பனை செய்யப்பட்ட மல்லிகை, நேற்று, 150 ரூபாய்க்கு ஏலம்போனது. அதேபோல், கிலோ, 100க்கு ஏலம் போன, சம்பங்கி, நேற்று கிலோ, 200 ரூபாய்க்கு விற்பனையானது. கிலோ, 60க்கு விற்பனை செய்யப்பட்ட அரளி, கிலோ, 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த விலை உயர்வு பயிரிட்ட விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

## அடி ஆத்தீ... எவ்ளோவ் பெரிய அத்தி!

கூடலுார்:கூடலுாரில் பெரிய அளவிலான அத்தி பழங்கள், அதிகளவில் விளைய துவங்கி உள்ளன.நீலகிரி மாவட்டம் கூடலுார், மிதவெப்பமான சீதோஷ்ண நிலை உள்ள பகுதியாக உள்ளது. இதனால் இங்கு பல்வேறு வகையான பழங்கள் விளைகின்றன. குறிப்பாக, பல்வேறு மருத்துவ குணங்களை உள்ளடக்கிய, அத்திப்பழங்கள் ஆங்காங்கே விளைகின்றன. இப்பழங்களுக்கு தற்போது கிராக்கி அதிகரித்து வருவதால், தற்போது விவசாயிகள் கூடுதலாக விளைவித்து வருகின்றனர். இதில், கூடலுார் தொரப்பள்ளியை சேர்ந்த பிரகாஷ் என்பவரின் வீட்டு தோட்டத்தில், விளைந்துள்ள அத்திப்பழங்கள் வியக்க வைக்கும் அளவுக்கு பெரிதாக உள்ளன. இதற்கான நாற்றுகளை ஆந்திராவில் இருந்து, கொண்டு வருவதாக கூறுகிறார் பிரகாஷ். இந்த பழங்களின் மருத்துவ குணம் குறித்து சித்தா மருத்துவர் ஒருவர் கூறுகையில், 'அத்திப்பழங்களை உண்பதால், உணவு செரிமானம், ரத்த உற்பத்தி அதிகரிக்கும். இதில், புரோட்டீன், கால்சியம், இரும்பு, வைட்டமின் சத்துகள் அதிகம் உள்ளன' என்றார்.

## விதியை மீறி வீட்டுமனைகளாக மாறும் வயல்கள்; நெற்பயிர் உற்பத்தி குறையும் அபாயம்

சின்னமனூர் : சின்னமனூர் வயல்களில் கட்டுமான பணிகள் நடப்பதால் நெல் உற்பத்தி பாதிக்கும் அபாயம் எழுந்துள்ளது.

தேனி மாவட்டத்தின் முக்கிய தொழில் மையமாக சின்னமனூர் உள்ளது. சுற்றியுள்ள 50 க்கும் மேற்பட்ட கிராம மக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்க சின்னமனூர் வருகின்றனர். வாழை பதனிடும் தொழில், நெல் சாகுபடி என தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அனைத்து வசதிகளும் கிடைப்பதால்

சின்னமனூரில் குடியேறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப காலி மனைகள் இல்லை. இதை பயன்படுத்தி முக்கிய வழித்தடங்களில் ரோட்டோரமாக உள்ள நெல்வயல்களை வீட்டு மனைகளாக மாற்றுகின்றனர். குறிப்பிட்ட காலம் தரிசாக கிடக்கும் நிலங்களை மட்டுமே வீட்டு மனைகளாக பயன்படுத்த வேண்டும் என்று அரசு உத்தரவுள்ளது. நகராட்சியில் உள்ள சில அதிகாரிகளின் ஆசியோடு கடந்த காரீப் பருவத்தில் அறுவடை செய்த வயல்களில் கட்டுமான பணிகள் நடக்கிறது. கட்டுமானத்திற்காக மடையிலிருந்து நீர் செல்லும் பாதை அடைக்கப்படுவதால், பக்கத்து வயல்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. விவசாயிகள் கூறியதாவது: பெரியாறு பாசனத்தால் சின்னமனூர் பகுதியில் இருபோக நெல் சாகுபடி நடக்கிறது. ரோட்டோரமாக உள்ள வயல்களில் நில மதிப்பை உயர்த்துவதற்காக கட்டடங்களை கட்டுகின்றனர். இவர்களுக்கு நகராட்சி அதிகாரிகள் சிலர் உடந்தையாக இருப்பதால் கட்டுப்படுத்த முடியவில்லை. உணவு உற்பத்தி குறைந்து வரும் நிலையில், நல்ல விளைச்சல் உள்ள பூமியில் கட்டடம் கட்டுவது ஏற்புடையதல்ல. வயல்களில் கட்டுமான பணிகள் மேற்கொள்வதை தடுக்க மாவட்ட நிர்வாகம் உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும், என்றனர்.

## தடுப்பணை பக்கச்சுவர் உடைந்ததால் திருப்புவனத்தில் விவசாயம் பாதிப்பு

திருப்புவனம் : வைகை ஆற்றில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும் கால்வாய்களில் பாசனத்திற்கு தண்ணீர் செல்லவும் கட்டப்பட்ட தடுப்பணை சேதமடைந் துள்ளதால் விவசாயம் பாதிக்கப் பட்டுள்ளது.

திருப்புவனம் தாலுகாவில் பெரும்பாலான கிராமங்கள் வைகை ஆற்று பாசனத்தை நம்பி உள்ளன. மழை பெய்யாவிட்டாலும் வைகை ஆற்றில் நீர் வரத்து இருந்தாலே கிணறுகளில் உள்ள தண்ணீரை வைத்து வாழை, தென்னை, நெல் போன்ற விவசாயத்தில் விவசாயிகள் ஈடுபடுவர்.

வைகை ஆற்றில் ஆக்கிரமிப்பு மற்றும் மணல் திருட்டால் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து விட்டது. மேலும் வைகை ஆற்றின் வலது மற்றும் இடது பிரதான கால்வாய்களின் முகப்பு ஆற்று மட்டத்தை விட உயரமாக இருப்பதால் ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டாலும் கால்வாய்களில் தண்ணீர் செல்வது இல்லை. கால்வாய்களில் தண்ணீர் செல்வதற்காக திருப்புவனம் புதூரில் 73.89 லட்ச ரூபாய் செலவில் கடந்த 10 ஆண்டு முன்பு தடுப்பணை கட்டப்பட்டது. தடுப்பணை கட்டி முடிக்கப்பட்ட ஒரே வருடத்திலேயே ஒருபக்க சுவர் உடைந்து விட்டது. இன்று வரை இந்த தடுப்பணையில் தண்ணீர் தேங் கவில்லை. இதே கால கட்டத்தில் இடைக் காட்டூரிலும் தடுப்பணை கட்டப் பட்டது, அதுவும் உடைந்து விவசாயத்திற்கு பயன்பாடு இல்லாமல் போய்விட்டது. தடுப்பணை உடைந்ததால் திருப்புவனம், புதூர், கணக்கன்குடி, லாடனேந்தல், அன்னியேந்தல், செம்ப ராயனேந்தல், இடைக்காட்டூர் உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து விட்டது. சேதமடைந்த தடுப் பணைகளை சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

**விநாயகருக்கு படைத்த வித்தியாசமான தேங்காய்**

சிங்கம்புணரி : சிங்கம்புணரி-திருப்புத்தூர் ரோட்டில் சிவபுரிப்பட்டி விலக்கு ரோடு அருகே வயிற்றுப்பிள்ளையார் கோயில் உள்ளது. இக்கோயிலில் 5 அடி உயரமுள்ள பெரிய விநாயகர், ஏழு தலை கொண்ட நாகராஜா உள்ளனர். உள்ளூர் பக்தர்கள் தவிர,இந்த வழியாக வானங்களில் செல்வோர் இங்கு இறங்கி விநாயகரை கும்பிட்டு தேங்காய் உடைத்து செல்வர். சிங்கம்புணரி பகுதியில் தென்னை சாகுபடி அதிகம் உண்டு. யாரோ ஒரு விவசாயி தென்னை மரத்தில் கொம்பு முளைத்த தேங்காய் விளைந்துள்ளது. இந்த வித்தியாசமான காயை சிவபுரி விநாயகர் முன் கொண்டு வந்து வைத்து நேர்த்தி செலுத்தியுள்ளார். இதை பக்தர்கள் பார்த்து சென்றனர்.

## வெங்காய செடிகளில் நோய் ; குறைந்த விளைச்சலால் பாதிப்பு

விருதுநகர் : எரிச்சந்தம் சுற்று ர பகுதியில் வெங்காயசெடிகளை நோய் தாக்கியதால் குறைவான விளைச்சலால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் எரிச்சநத்தம், செவலூர், கிருஷ்ணநாயக்கன்பட்டி, குன்னூர், பிள்ளையார் நத்தம், நடையனேரி உட்பட பல இடங்களில் 500க்கு மேற்பட்ட ஏக்கர் பரப்பில் விவசாயிகள் வெங்காயம் நடவு செய்துள்ளனர். அறுவடைக்கு தயாரான நிலையில் செடிகளில் புழு தாக்கி காய்ந்து சருகாகிறது. ஆயிரக்கணக்கில் செலவழித்தும் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. எதிர்பார்த்த மகசூல் கிடைக்காமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.எரிச்சநத்தம் சேர்ந்த விவசாயி மாரியப்பன்,"" 30 சென்டில் வெங்காயம் நடவு செய்தேன். அறுவடைக்கு தயாரான நிலையில் திடீரென செடியில் பச்சை புழுக்கள் ஏற்பட்டு காய்ந்து சருகானது. உரக்கடையில் கொடுத்த மருந்தை அடுத்து ஓரளவிற்கு வெங்காயம் கிடைத்துள்ளது. நோய் தாக்குதல் இல்லாமல் இருந்தால் 30 சென்டிற்கு 60 கிலோ கொண்ட 35 மூடை வெங்காயம் கிடைக்கும். ஆனால் 15 மூடை தான் கிடைத்துள்ளது. பாதிக்கு பாதி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வெளி மார்க்கெட்டில் வெங்காயம் கிலோ 40 முதல் 55 ரூபாய் வரை விற்கின்றனர். எங்களிடம் 20 ரூபாய்க்கு வாங்கி செல்கின்றனர். விளைச்சல் இன்றி பாதிக்கப்பட்ட நாங்கள் தற்போதுவிலையின்றி பாதிக்கிறோம்," என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழகத்தில் இன்று மழைக்கு வாய்ப்பு**

வெப்பச்சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் வெள்ளிக்கிழமை ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: வெப்பச்சலனம் காரணமாக, கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக தமிழகம், புதுச்சேரியில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது. வெப்பச்சலனம் நீடிப்பதால் தமிழகம், புதுச்சேரியில் வெள்ளிக்கிழமை இடியுடன் கூடிய மழை ஓரிரு இடங்களில் பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும்.

நகரின் அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரியாக இருக்கும். அடுத்து வரும் இரண்டு நாள்களுக்கு தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது.

நவீன தொழில்நுட்பங்கள் மூலமே வேளாண் உற்பத்தியை அதிகரிக்க முடியும்: ஆட்சியர் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவன் மூலமே, வேளாண் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என, மாவட்ட ஆட்சியர் த.ந. ஹரிஹரன் தெரிவித்தார்.

காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக வேளாண் அறிவியல் மையம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் சார்பில், காரீப் முன்பருவகால விழிப்புணர்வு முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு. நடராஜன் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் த.ந. ஹரிஹரன் முகாமைத் தொடக்கி வைத்துப் பேசியதாவது: குறைந்த நீரைப் பயன்படுத்தி, வறட்சியை தாங்கி அதிக லாபம் தரும் பயிர் வகைகளை தேர்வு செய்து, விவசாயிகள் சாகுபடி செய்யவேண்டும். சிறுதானியங்களுக்கு அதிக வரவேற்புள்ளதால், அதனை இயற்கை வேளாண்மை முறையில் சாகுபடி செய்து பொருளாதார மேம்பாடு அடைவதற்கு விவசாயிகள் முயற்சிக்கலாம்.

அரசின் வழிகாட்டுதலைப் பின்பற்றி, நவீன தொழில்நுட்ப முறைகள் மூலம் காரீப் பருவத்தில் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார் அவர்.

பல்கலை. துணைவேந்தர் சு. நடராஜன் பேசியது: சாகுபடி செய்யும் பயிர் வகைகளுக்கு தேவையான இடுபொருள்கள், பாதுகாப்பு மருந்து, விலை விவரம் போன்ற தகவல்களை முன்பே சேகரித்து, அதற்கு ஏற்றவாறு திட்டமிடுவது அவசியம். இதனால் இழப்புகளைத் தவிர்த்து, லாபம் பெறலாம்.

மேலும், பாரம்பரிய வேளாண்மைச் செயல்பாடுகளோடு, நவீன தொழில்நுட்பங்களையும் அறிந்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். ஒவ்வொரு விவசாயியும், ஒரு வேளாண் விஞ்ஞானியை போல் செயல்பட வேண்டும் என்றார். முகாமில், இணை இயக்குநர் வேளாண்மைத் துறை ந. சம்பத்குமார், துணை இயக்குநர் (தோட்டக்கலைத் துறை) என். ராமநாதன், திட்ட ஒருங்கிணைப்பாளர் அ. உதயக்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**ரூ.13 லட்சத்துக்கு சூரிய காந்தி விதை ஏலம்**

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 808 சூரிய காந்தி விதை மூட்டைகள் வியாழக்கிழமை ஏலம் போனது.

திண்டுக்கல், வேடசந்தூர், அறவக்குறிச்சி, பில்லமநாயக்கன்பட்டி, போரூவார்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து 808 சூரிய காந்தி விதை மூட்டைகள் ஏலத்துக்கு வந்தன. அதிகபட்சமாக கிலோ ரூ.36.89-க்கும், குறைந்தபட்சமாக ரூ.31.16-க்கும் ஏலம் போனது. இதன் மொத்த தொகை ரூ.13.56 லட்சம் ஆகும்.

**நுண்நீர் பாசனத் திட்டப் பணிகள் ஆய்வு**

தஞ்சாவூர் ஒன்றியத்தில் தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்க நுண்நீர் பாசன திட்டத்தின் கீழ் நடைபெறும் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

விளார், அற்புதாபுரம், திருக்கானூர்பட்டி ஆகிய கிராமங்களில், வாழை, மரவள்ளி, கரும்பு ஆகிய பயிர்களில் விவசாயிகள் அரசு மானியத்தில் நுண்நீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ள வயல்களைப் பார்வையிட்ட அவர் நுண்நீர் பயிர் பாசனப் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

மருங்குளத்தில் தோட்டக்கலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரசுத் தோட்டக்கலைப் பண்ணையில் தேசிய தேசிய தோட்டக் கலை இயக்கத் திட்டத்தின் கீழ் 768 ச.மீ. பரப்பளவில் நிழல் வலை, ஆழ்குழாய் கிணறுகளை இணைத்து நீர் பாசன ஆதாரங்களைப் பெருக்கும் வகையில் நிறுவப்பட்டிருந்த இணைப்பு பணிகளையும் ஆய்வு செய்தார். இதுகுறித்து தொழில் நுட்ப உதவி தேவைப்பட்டால், வேளாண் துறையினரை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

பண்ணையில் நிழல் வலையின் கீழ் குழித்தட்டு முறையில் கத்திரி நாற்றுகள் உற்பத்தி பணியைத் தொடங்குவதற்காக விதைகளைக்

குழித்தட்டில் ஊன்றும் பணியைத் தொடக்கி வைத்தார். இந்த முறையைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்குத் தரமான நாற்றுகளை உற்பத்தி செய்து வழங்க அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) டி. சொக்கலிங்கம், தோட்டக்கலைத் துறைத் துணை இயக்குநர் ஏ.இ. சுரேஷ்குமார், உதவி இயக்குநர் அ. வெங்கட்ராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விளைநிலத்தில் ஓஎன்ஜிசி நிறுவனத்தினர் ஆய்வு செய்ய விவசாயிகள் எதிர்ப்பு**

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் அருகே விளைநிலத்தில் ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தினர் போர்வெல் அமைத்து வியாழக்கிழமை ஆய்வு செய்ய முயன்றதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

நீடாமங்கலம் அருகேயுள்ள முல்லைவாசல் பெரம்பூர், கண்ணம்பாடி, நன்மங்கலம் உள்ளிட்ட கிராமங்களில் குறுவை நெற்பயிர் சாகுபடியும், பருத்தி சாகுபடியும் செய்யப்பட்டுள்ளது.

இந்த கிராமப் பகுதிகளில் இயற்கை எண்ணெய் எரிவாயு கழகம் (ஓ.என்.ஜி.சி.) நிறுவனம் சார்பில் ஆய்வு மேற்கொள்ள 80 அடி ஆழத்துக்கு 90 இடங்களில் போர்வெல் அமைத்தனர். இதையறிந்த விவசாயி ஜெகன், நம்மாழ்வார் இயக்கத்தைச் சேர்ந்த ராமலிங்கம் மற்றும் விவசாயிகள் பலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

தகவலறிந்த நீடாமங்கலம் வட்டாட்சியர் கோ. பழனிவேல், வருவாய் ஆய்வாளர் சின்னையன் கிராம நிர்வாக அலுவலர் திவ்யா மற்றும் அலுவலர்கள் விவசாயிகளிடமும், ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தினரிடமும் நேரில் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையின்போது, போர்வெல் அமைத்த பகுதியில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்கு உரிய நிவாரணத் தொகையை வழங்குவதாக ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தினர் தெரிவித்தனர். மேலும், போர்வெல்லை

அகற்றிக்கொள்ளவும் ஒப்புக்கொண்டனர். இதனால், விவசாயிகள் சமாதானம் அடைந்தனர்.

**பருத்தி சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு வேளாண் மாணவிகள் செயல்விளக்கம்**

சீர்காழியை அடுத்த அரசூர் கிராமத்தில் பருத்தி சாகுபடி குறித்த சந்தேகங்களை வேளாண் மாணவிகள் விவசாயிகளுக்கு செயல்விளக்கத்துடன் வியாழக்கிழமை பயிற்சி அளித்தனர்.

சீர்காழி அடுத்த அரசூர் கிராமத்தில் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்புலம் இறுதியாண்டு மாணவிகள் 100-க்கும் மேற்பட்டோர் கிராமங்களில் தங்கி கள பயிற்சி பெற்று வருகின்றனர். அவ்வாறு பயிற்சி மேற்கொள்ளும் மாணவிகள் அப்பகுதி விவசாயிகள் கோரும் சந்தேகங்களுக்கு உரிய செயல்விளக்கத்துடன் பதிலளிக்கின்றனர். இதேபோல், பருத்தி சாகுபடி குறித்து மாணவிகள் செயல்விளக்கம் அளித்தனர். பருத்தி சாகுபடி, எவ்வாறு பருத்திஎடுப்பது, உர நிர்வாகம், களை நிர்வாகம் ஆகியவற்றை விவசாயிகளுக்கு விளக்கினர்.

**வீட்டுத்தோட்ட பராமரிப்புப் பயிற்சி**

கிள்ளிகுளம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் பாளையங்கோட்டையில் வீட்டுத்தோட்ட பராமரிப்புப் பயிற்சி நடைபெற்றது.

பாளையங்கோட்டை வேளாண் உதவி மைய வளாகத்தில் நடைபெற்ற இப்பயிற்சியில் உதவிப் பேராசிரியர் சி.ராஜாபாபு வரவேற்றார். வீட்டில் பூச்செடிகள், பழ மரங்கள் பராமரிப்பு முறைகள், வாசனைத் திரவிய பயிர்களின் முக்கியத்துவம் குறித்து தோட்டக்கலைத்துறை பேராசிரியர் பிரேம் ஜோசுவா பேசினார்.

வீட்டுத் தோட்டத்தில் இயற்கை முறையில் கொத்தமல்லி, சிறிய வெங்காயம், புதினா, கறிவேப்பிலை, கத்தரி, வெண்டை, மிளகாய்,

தக்காளி உற்பத்தி குறித்து விளக்கப்பட்டது. மா, கொய்யா, பலா, எலுமிச்சை, மாதுளை போன்றவற்றில் பூக்கள் உதிர்வதையும், நுண்ணூட்டச்சத்துக் குறைவுக்கான அறிகுறிகள் அவற்றை நிவர்த்தி செய்து அதிக மகசூல் பெறும் வழிமுறைகள் குறித்து விளக்கப்பட்டது. செயல்விளக்கத் திடலில் செயல்முறை பயிற்சியும் அளிக்கப்பட்டது. இதில் திராளானோர் கலந்துகொண்டனர்.

**நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி**

வேளாண்துறை ஆத்மா திட்டம், காலாப்பட்டு பண்ணை தகவல் மற்றும் விவசாயிகள் ஆலோசனை மையம் சார்பில் விவசாயிகளுக்கான கோடைகால நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி முகாம் சஞ்சீவி நகர் கிராமத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் கோடை நிலக்கடலை சாகுபடியில் மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் பண்ணைப்பள்ளி முகாம் நடைபெற்றது. நிலக்கடலை சாகுபடியில் முன்னோடி விவசாயியான சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கினார்.

காலாப்பட்டு உழவர் உதவியக வேளாண் அலுவலர் டி.அனுப்குமார் வரவேற்றார். பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலைய பூச்சியல்துறை முனைவர் விஜயகுமார், நிலக்கடலை பயிரில் ஏற்படும் பூச்சிகள், அவற்றை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தும் முறை, இனக்கவர்ச்சிப் பொறி மற்றும் விளக்குப்பொறி வைத்து பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறை குறித்து விவரித்தார்.

வேளாண் அலுவலர் வளர்மதி வாசுதேவன் (நோயியல்துறை), ஒருங்கிணைந்த நோய் கட்டுப்பாடு முறை பற்றி விளக்கினார். மணிப்பூர் அரசு வேளாண்துறையைச் சேர்ந்த 15 துணை வேளாண் இயக்குநர்கள் மற்றும் வேளாண் அலுவலர்கள், நிலக்கடலை விவசாயிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ஆ.ஆதித்தன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் நாராயணசாமி மற்றும் கிராம விரிவாக்கப் பணியாளர் பழனி ஆகியோர் செய்திருந்தனர்.

**சென்னையில் காய்கறிகள் விலை வீழ்ச்சி பல்லாரி வெங்காயம் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு**



சென்னை,

தக்காளி, கத்தரிக்காய், முருங்கைக்காய், சாம்பார் வெங்காயம் போன்றவற்றின் விலை குறைந்துள்ளது, வரத்து குறைவால் பல்லாரி வெங்காயம் விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர். சாம்பார் வெங்காயம்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த மாதம் சாம்பார் வெங்காயம் விலை ஒரு கிலோ ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது விளைச்சல் அதிகரித்துள்ளதால் ஒரு கிலோ சாம்பார் வெங்காயம் ரூ.35-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கோவைக்காய், காலிபிளவர், சேனைக்கிழங்கு, அவரைக் காய் உள்பட சில காய்கறிகளின் விலை குறைந்து இருக்கிறது. அதேபோல், தக்காளி, முருங்கைக்காய், கத்தரிக்காய், வெண்டைக்காய் ஆகியவற்றின் விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த வாரம் வரத்து குறைவு காரணமாக பல்லாரி வெங்காயம் விலை திடீரென்று உயர்ந்தது. தொடர்ந்து விளைச்சல் குறைவாகவே இருப்பதால், பல்லாரி வெங்காயம் விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

அதிகரிக்க வாய்ப்பு

இதுகுறித்து சென்னை கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்திரராஜன் கூறியதாவது:-
விளைச்சல் அதிகரித்து நாளொன்றுக்கு 10 லாரிகளில் சாம்பார் வெங்காயம் வருகிறது. இதன் காரணமாக சாம்பார் வெங்காயம் விலை குறைந்துள்ளது.
5 முதல் 10 லாரிகளில் வந்து கொண்டு இருந்த முருங்கைக்காய், விளைச்சல் அதிகரித்து தற்போது தாராபுரம், பெரம்பலூர் ஆகிய இடங்களில் இருந்து 25 லாரிகளில் கொண்டுவரப்படுகிறது. கத்தரிக்காய், தக்காளியும் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் முருங்கைக்காய், தக்காளி, கத்தரிக்காய் ஆகியவற்றின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

குஜராத், உத்தரபிரதேசம் ஆகிய இடங்களில் இருந்து நாளொன்றுக்கு 70

லாரிகளில் வந்துகொண்டு இருந்த பல்லாரி வெங்காயம், விளைச்சல் குறைவால் தற்போது 40 லாரிகளில் தான் வருகிறது. இதனால் அதன் விலை திடீரென்று உயர்ந்தது. விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. விலை நிலவரம்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் நேற்றைய விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:-
பல்லாரி வெங்காயம் - ரூ.40, பீன்ஸ் - ரூ.25 முதல் ரூ.40 வரை, உருளைக்கிழங்கு - ரூ.16, கேரட் - ரூ.40, பீட்ரூட் - ரூ.25, சவ்சவ் - ரூ.20, நூக்கல் - ரூ.20, மிளகாய் - ரூ.20, முட்டைக்கோஸ் - ரூ.15, இஞ்சி (பழையது) - ரூ.90, இஞ்சி (புதியது) - ரூ.50, சேனைக்கிழங்கு - ரூ.25, கத்தரிக்காய் - ரூ.8 முதல் ரூ.12 வரை, வெண்டைக்காய் - ரூ.15, அவரைக் காய் - ரூ.20 முதல் ரூ.25 வரை, கோவைக்காய் - ரூ.12, கொத்தவரங்காய் - ரூ.18, முருங்கைக்காய் - ரூ.20, தக்காளி - ரூ.10 முதல் ரூ.15 வரை, சாம்பார் வெங்காயம் - ரூ.35, காலிபிளவர் - ரூ.20, புடலங்காய் - ரூ.18, பீர்க்கங்காய் - ரூ.20, சேப்பக்கிழங்கு - ரூ.30, சுரைக் காய் - ரூ.15, தேங்காய் - ரூ.15 முதல் ரூ.20 வரை, வாழைக் காய்(காய் ஒன்று) - ரூ.5. இவ்வாறு அவர் கூறினார்.

**கோவையில் பெரிய வெங்காயம் விலை கடும் உயர்வு தக்காளி விலை வீழ்ச்சி**



உற்பத்தி மற்றும் வரத்து குறைந்ததால் கோவையில் பெரிய வெங்காயம் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் தக்காளி விலை வீழ்ச்சிஅடைந்துள்ளது.

காய்கறிரகங்கள்

கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, தொண்டாமுத்தூர், அன்னூர், மேட்டுப்பாளையம் சுற்று வட்டார பகுதிகளில் அதிக அளவில் காய்கறி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்த பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள மார்க்கெட்டுகளுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டுவருகிறது.

இதேபோல் வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் காய்கறி ரகங்கள் கோவை மாவட்டத்திற்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்தநிலையில் கோவையில் பெரிய வெங்காயம் விலை திடீரென்று உயர்ந்துள்ளது.

அதேநேரத்தில் தக்காளி விலை குறைந்துள்ளது. கோவையில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறி ரகங்களின் விலை விவரம் வருமாறு:-

பெரியவெங்காயம்-தக்காளி

கத்தரிக்காய் கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரையிலும், வெண்டைக்காய் கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரையிலும், தக்காளி கிலோ ரூ.10 முதல் 15 வரையிலும், புடலை கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரையிலும், பீர்க்கன்காய் கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரையிலும், சுரைக்காய் கிலோ ரூ.15 முதல் ரூ.24 வரையிலும், பாகற்காய் கிலோ ரூ.20 முதல் ரூ.36 வரையிலும் விற்பனையானது.

கொத்தவரங்காய் கிலோ ரூ.20-க்கும், பூசணிக்காய் கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரையிலும், அரசாணிக்காய் கிலோ ரூ.8 முதல் ரூ.12 வரையிலும், மேரைக்காய் கிலோ ரூ.15 முதல் ரூ.24 வரையிலும், பச்சை மிளகாய் கிலோ ரூ.36 முதல் ரூ.50 வரையிலும், சின்ன வெங்காயம் கிலோ ரூ.20 முதல் ரூ.35 வரையிலும், பெரிய வெங்காயம் கிலோ ரூ.40 முதல் ரூ.54 வரையிலும் விற்கப்பட்டது.

காரணம் என்ன?

முருங்கைக்காய் கிலோ ரூ.20 முதல் ரூ.40 வரையிலும், உருளைக்கிழங்கு கிலோ ரூ.15 முதல் ரூ.25 வரையிலும், சேனைக்கிழங்கு கிலோ ரூ.25 முதல் ரூ.32 வரையிலும், முள்ளங்கி கிலோ ரூ.20 முதல் ரூ.36 வரையிலும், கேரட் கிலோ ரூ.30 முதல் ரூ.45 வரையிலும், பீட்ரூட் கிலோ

ரூ.20 முதல் ரூ.36 வரையிலும், நூல்கோல் கிலோ ரூ.20 முதல் ரூ.40 வரையிலும், பீன்ஸ் கிலோ ரூ.40 முதல் ரூ.65 வரையிலும் விற்பனையானது.

இது தொடர்பாக தியாகி குமரன் மார்க்கெட் சங்க பொருளாளர் கார்த்திகேயன் கூறும்போது, 'உற்பத்தி குறைவால் கோவை மார்க்கெட்டுகளுக்கு பெரிய வெங்காயம் வரத்து குறைந்துள்ளது. இதனால் விலை உயர்ந்துள்ளது. இதேபோல் தக்காளி வரத்து அதிகரித்து உள்ளதால், விலை குறைந்துள்ளது. மற்ற காய்கறிகளை பொறுத்தவரை விலை நிலையாகவே உள்ளது' என்றார்.

**ஈரோடு மாவட்ட பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறப்பு: விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் – பயிர்க்கடன் வழங்க ஏற்பாடு கலெக்டர் தகவல்**



ஈரோடு,

ஈரோடு மாவட்டத்தில், பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளதால் விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் மற்றும் பயிர்க்கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளதாக மாவட்ட கலெக்டர் எஸ்.பிரபாகர் கூறினார்.

<u>தண்ணீர் திறப்பு</u>

ஈரோடு மாவட்டத்தில் உள்ள பாசன ஆதாரங்களில் இருந்து காலிங்கராயன், அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. அதனால் விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் மற்றும் பயிர்க்கடன் வழங்குவது தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் எஸ்.பிரபாகர் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

ஈரோடு மாவட்டத்தில் உள்ள பாசன பகுதியில் தற்போது தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. அதனால் அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள், பயிர்க்கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

<u>விதை நேர்த்தி</u>

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன பகுதிகளுக்கும், கீழ்பவானி பாச பகுதிகளுக்கும் ஏற்ற நெல் ரகங்களான ஏ.எஸ்.டி.–16, கோ–50, 51, 43, 48, 49, ஏ.டீ.டி–38, 39, 44, 50, வெள்ளை பொன்னி போன்ற ரகங்கள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தினால் பரிந்துறை செய்யப்பட்டு உள்ளது. விவசாயிகள் விதைமூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த கட்டாயமாக விதை நேர்த்தி செய்து விதைக்கவேண்டும்.

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் பெவிஸ்டின் அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் மருந்தினை கொண்டு விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். விவசாயிகள் தங்களது பகுதி வேளாண்மை துறை களப்பணியாளர்களை அணுகி இடுபொருட்கள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) விஸ்வநாதன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**நடப்பு நிதியாண்டில் விவசாயிகளுக்கு ரூ.5 ஆயிரத்து 500 கோடி பயிர் கடன் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தகவல்**



காஞ்சீபுரம்,

தமிழ்நாட்டில் நடப்பு நிதியாண்டில் விவசாயிகளுக்கு ரூ.5 ஆயிரத்து 500 கோடி பயிர் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தெரிவித்தார்.

<u>அமைச்சர் ஆய்வு</u>

காஞ்சீபுரம் மாவட்டம் மணிமங்கலம், சோமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் தமிழக கூட்டுறவு துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ திடீரென ஆய்வு செய்தார்.

மேலும் அங்குள்ள பதிவேடுகளை அமைச்சர் பார்வையிட்டார்.

விவசாயிகளுக்கு எவ்வளவு பயிர் கடன், நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் கேட்டறிந்தார். அலுவலகங்களில் உள்ள பாதுகாப்பு பெட்டக வசதிகள் எவ்வாறு உள்ளது, அபாய மணி செயல்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு நடத்தினார். மேலும் கூட்டுறவு கடன் சங்க அலுவலகங்களில் சாதி, வருமானம் உள்ளிட்ட சான்றிதழ்களுக்காக எவ்வளவு மனுக்கள் பெறப்பட்டுள்ளன என்பதையும் கேட்டறிந்தார்.

பின்னர் அவர் கூறியதாவது:–

தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா ஆணைக்கிணங்க காஞ்சீபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு துறையின் சார்பில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பல்வேறு கடன்கள், மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் குறித்து உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிற மாவட்டங்களில் பணிபுரியும் கூட்டுறவு அலுவலர்களை கொண்டு காஞ்சீபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் அனைத்து நகர கூட்டுறவு சங்கங்களில் 100 சதவீதம் ஆய்வு செய்யப்படுகிறது.

தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்படி வேளாண் உற்பத்தியை பெருக்கிடும் வகையில் கூட்டுறவுத்துறை மூலமாக கடந்த 4 ஆண்டுகளில் 40 லட்சத்து 20 ஆயிரத்து 217 விவசாயிகளுக்கு ரூ.17 ஆயிரத்து 346 கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. பயிர் கடன் பெற்று குறிப்பிட்ட காலத்தில் கடனை திருப்பி செலுத்திய விவசாயிகளுக்கு 7 சதவீதம் வட்டி தள்ளுபடியாக ரூ.1,214 கோடி வழங்கப்பட்டுள்ளது.

<u>ரூ.5ஆயிரத்து 500 கோடி</u>

நடப்பு நிதியாண்டில் தமிழகத்தில் உள்ள விவசாயிகளுக்கு ரூ.5ஆயிரத்து 500 கோடி பயிர்க் கடன் வழங்கிட தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா

இலக்கு நிர்ணயம் செய்துள்ளார். மணிமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் 2013–14ம் நிதியாண்டில் ரூ.43 லட்சமும், 2014–15ம் நிதியாண்டில் ரூ.54 லட்சமும் லாபம் ஈட்டியுள்ளது. சோமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் 2013–14–ம் நிதியாண்டில் ரூ.15 லட்சமும், 2014–15–ம் நிதியாண்டில் ரூ.30 லட்சமும் லாபம் ஈட்டியுள்ளது.

தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா கூட்டுறவு துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு முன்தேதியிட்டு ஊதிய உயர்வை வழங்கி பணியாளர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>ரேஷன் கடை</u>

இந்த ஆய்வின்போது தமிழக உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலாளர் சிவ்தாஸ் மீனா, தமிழக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் வி.கே.சண்முகம், உள்பட பலர் உடன் இருந்தனர்.

சோமங்கலத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க அலுவலகத்தில் அமைச்சர் செல்லூர்.கே.ராஜூ ஆய்வு மேற்கொண்டபோது நடுவீரப்பட்டு ஊராட்சி மன்றத்தலைவர் சாதனாசீனிவாசன் தனது ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிய ரேஷன் கடை அமைக்க வேண்டும் என்று மனு அளித்தார். அப்போது விரைவில் புதிய ரேஷன்கடை அமைக்க பரிந்துரை செய்வதாக அமைச்சர் தெரிவித்தார்.

**நுண்ணுயிர் நீர் பாசன திட்டப்பணிகள் கலெக்டர் சுப்பையன் ஆய்வு**



தஞ்சை அருகே நுண்ணுயிர் நீர் பாசன திட்டப்பணிகளை கலெக்டர் சுப்பையன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நுண்ணுயிர் நீர் பாசன திட்டப்பணி

தஞ்சையை அடுத்த தஞ்சை ஒன்றியத்தை சேர்ந்த விளார், அற்புதபுரம் மற்றும் திருக்கானூர்பட்டி ஆகிய கிராமங்களில் வாழை, மரவள்ளி மற்றும் கரும்பு பயிர்களில் விவசாயிகள் அரசு மானியத்தில் நுண்ணுயிர் நீர் பாசன திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள வயல்களை கலெக்டர் சுப்பையன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது விவசாயிகளிடம் நுண்ணுயிர் பயிர் பாசன பயன்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

மருங்குளத்தில் உள்ள தோட்டக்கலைத்துறையின் கட்டுப்பாட்டில் அரசு தோட்டக்கலை பண்ணையில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு இருந்த நிழல்வலை மற்றும் ஆழ்குழாய் கிணறுகளை இணைத்து நீர்பாசன ஆதாரங்களை பெருக்கும் வகையில் நிறுவப்பட்டு

இருந்த இணைப்பு பணிகளையும் பார்வையிட்டு கலெக்டர் சுப்பையன் ஆய்வு செய்தார். மேலும் இது தொடர்பான தொழில்நுட்ப உதவி தேவைப்பட்டால் வேளாண்மைத்துறையினரை அணுகி பெற்றுக்கொள்ளுமாறு கலெக்டர் கேட்டுக்கொண்டார்.

கத்தரிநாற்று

மேலும் நிழல்வலையின் கீழ் குழித்தட்டு முறையில் கத்தரி நாற்றுகள் உற்பத்தி பணியினை தொடங்கும் முகமாக விதைகளை குழித்தட்டில் ஊன்றும் பணியினையும் கலெக்டர் சுப்பையன் தொடங்கி வைத்தார். இந்த முறையினை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு தரமான நாற்றுகளை உற்பத்தி செய்து வழங்க வேண்டும் எனவும் கலெக்டர் கேட்டுக்கொண்டார்.

ஆய்வின் போது கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சொக்கலிங்கம், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் சுரேஷ்குமார், உதவி இயக்குனர் வெங்கட்ராமன் மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**விவசாயிகள் தான் நாட்டின் முதுகெலும்பு கலெக்டர் மதிவாணன் பேச்சு**



நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் காரீப் முன்பருவ விழிப்புணர்வு பெருவிழாவில் கலெக்டர் மதிவாணன் பேசியபோது எடுத்தபடம்.

விவசாயிகள் தான் நாட்டின் முதுகெலும்பு என்று நீடாமங்கலத்தில் நடந்த காரீப் முன்பருவ விழிப்புணர்வு விழாவில் மாவட்ட கலெக்டர் மதிவாணன்கூறினார்.

விழிப்புணர்வுபெருவிழா

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் காரீப் முன்பருவ விழிப்புணர்வு பெருவிழா மற்றும் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. விழாவிற்கு கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கி பேசினார்.அப்போது அவர் கூறியதாவது:-

இதுபோன்று கலந்தாய்வு கூட்டங்களை அடிக்கடி நடத்துவது அவசியமாகும். விவசாயத்தை தொழிலாக செய்ய வேண்டும்.

தற்போதைய அறிவியல் வளர்ச்சியும், எந்திரமயமாக்கலும் உற்பத்தி என்பது ஒரு மூலப்பொருளிலிருந்து உருவாகுவது. விவசாய நிலங்களை வேறு எந்த உபயோகத்திற்கும் மாற்ற கூடாது. கடந்த ஆண்டு 45 ஆயிரம் எக்டேரில் குறுவை பயிரிடப்பட்டது. இந்த ஆண்டு 65 ஆயிரம் எக்டேராகஉயர்ந்துள்ளது.

முதுகெலும்பு

உங்களது உழைப்பு இந்த சமுதாயத்தையே வாழ வைக்கிறது. விவசாயிகள் விவசாயத்தோடு சார்ந்த தொழிலான கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல் போன்ற தொழிலையும் செய்து வந்தால் இன்னும் அதிகமாக லாபம் பெறலாம். விவசாயிகள் தான் இந்த நாட்டின் முதுகெலும்பு. இவ்வாறு அவர் கூறினார்.நிகழ்ச்சியில் நெல் விதைத்தல் முதல் மதிப்பூட்டுதல் வரை என்ற கையேட்டை கலெக்டர் மதிவாணன் வெளியிட்டார். விவசாயிகளுக்கு வினாடி- வினா போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இதில் வேளாண் இணை இயக்குனர் மயில்வாகணன், நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ரவி, தஞ்சாவூர் வேளாண் கல்லுாரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் சாமிஅய்யன், திட்ட ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன், உதவி பேராசிரியர்கள் காமராஜ், ராஜாரமேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்

**காரிப் பருவத்தில் பயிர் காப்பீடு செய்ய அறிவுறுத்தல்**

திண்டுக்கல், : தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களில் இந்த ஆண்டு காரிப் பருவத்தில் 20 பயிர்களுக்கு காப்பீடு செய்ய விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,'காப்பீட்டு திட்டத்தில் கடன்

பெறாத விவசாயிகள் கம்பு, சோளம், ராகி, மக்காச்சோளம், துவரை, உளுந்து, பச்சைப்பயிறு, நிலக்கடலை, எள்ளு, சூரியகாந்தி, பருத்தி, உருளை, வெங்காயம், அன்னாசி, மஞ்சள், வாழை, மரவள்ளி ஆகிய பயிர்களுக்கு செப்.15க்குள் அல்லது பயிருக்கான விதைப்பு மற்றும் நடவு ஒரு மாத காலத்திற்குள் இருப்பின் எது முந்தையதோ அதன்படி காப்பீடு செய்துகொள்ளலாம்.

நெல்(சம்பா, தாளடி, பிசானம்), கரும்பு பயிர்களுக்கு டிச.15க்குள் அல்லது பயிருக்கான விதைப்பு மற்றும் நடவு ஒரு மாத காலத்திற்குள் இருப்பின் எது முந்தையதோ அதன்படி காப்பீடு செய்து கொள்ளலாம்.கூடுதல் மதிப்பீட்டிற்கான பிரீமிய தொகையை பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் தங்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் விருப்பத்தின் பேரில் செலுத்தலாம். பயிர்க்கடன் பெற்ற விவசாயிகள் கடன் பெற்ற வங்கி மூலமே இத்திட்டத்தில் சேர வேண்டும்.

இயற்கை சீற்றங்களான வறட்சி, வெள்ளம் ஏற்படுமாயின் மேற்குறிப்பிட்ட தேதிக்கு முன்னரே பிரிமியம் பெறுவது நிறுத்தப்படலாம்.விவசாயிகள் இத்திட்டத்தில் சேர முன்மொழிவு படிவங்களை அருகில் உள்ள வேளாண் அலுவலகம் அல்லது கூட்டுறவு, வர்த்தக வங்கிகளில் பெறலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**பயிர் காப்பீடு வழங்க கோரி வழக்கு கலெக்டர் பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு**

மதுரை, : பயிர் காப்பீடு வழங்கக்கோரிய வழக்கில் கலெக்டர் பதிலளிக்க ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது. சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகேயுள்ள தாயனூரைச் சேர்ந்த கருப்பசாமி, ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு: கூட்டுறவு வங்கியில் பயிர் கடன்

பெற்றுள்ளோம். கடன் வழங்கும் போது பயிர்களை இன்சூரன்ஸ் செய்து அதற்கான கட்டணம் பிடித்தம் செய்யப்படுகிறது. ஆனால் மழை, சூறாவளி போன்றவற்றால் பயிர்கள் பாதிக்கப்படும் போது இழப்பீட்டு தொகைவழங்கப்படுவதில்லை.

இது குறித்து கலெக்டர் உள்ளிட்டோருக்கு மனு அளித்தேன். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, பயிர்கள் பாதிப்பிற்கு உரிய இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார். இந்த மனுவை நீதிபதிகள் ஆர்.சுதாகர், வி.எம்.வேலுமணி ஆகியோர் விசாரித்தனர். இது போல் இழப்பீடு கேட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் விபரத்தை அரசுத் தரப்பில் தெரிவிக்க உத்தரவிட்ட நீதிபதி, மனு குறித்து சிவகங்கை கலெக்டர், மத்திய கூட்டுறவு வங்கி மேலாளர், தேசிய பயிர் காப்பீட்டு திட்ட அதிகாரி உள்ளிட்டோர் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்தார்.

**அடையாள அட்டையுடன் வராத விவசாயிகள் உழவர்சந்தையில் விற்பனை செய்ய அனுமதி இல்லை**

கோவை : கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் அடையாள அட்டையுடன் வராத விவசாயிகளுக்கு அனுமதியில்லை என்று உழவர் சந்தை நிர்வாகி அறிவித்துள்ளார். கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் விவசாயிகள் போர்வையில் விளைபொருட்களை விற்பனை செய்து வரும் வியாபாரிகளை கண்டறியவும், அவர்களை களையவும் புதிதாக பொறுப்பேற்றுள்ள உழவர் சந்தை நிர்வாகியும் வேளாண் அலுவலருமான தாமரைச்செல்வன் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அவர் உழவர் சந்தை விவசாயிகளுக்கு வழங்கியுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:உழவர் சந்தையில் பதிவு பெற்று அடையாள அட்டை பெற்றுள்ள விவசாயிகள் உழவர் சந்தைக்கு விளைபொருள்களை விற்பனைக்கு கொண்டு வரும்போது, தங்களுக்கு வழங்கப்பட்ட ஒரிஜினல் அடையாள அட்டைகளை கொண்டு வர

வேண்டும். கொண்டு வராவிட்டால் அனுமதியில்லை. அடையாள அட்டையின் ஜெராக்ஸ் கொண்டு வந்தாலும் அனுமதியில்லை.

உழவர் சந்தையில் உழவர் சந்தை அடையாள அட்டைதாரரோ மற்றும் குடும்ப நபர்களோ தங்கள் வருகையை பதிவு செய்ய வேண்டும். கொண்டு வரும் தங்களது விளை பொருட்களை பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யாமல் அட்டையில் இல்லாத விளைபொருட்களை விற்கவோ அல்லது அட்டைதாரர் அல்லாத பிற நபர்களை பதிவு செய்யவும், விற்பனை செய்யவும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் தாங்கள் கொண்டு வரும் விளை பொருட்களை காலை 6 மணிக்குள் விவசாயிகள் உழவர் சந்தையில் பதிவு செய்ய வேண்டும். 6 மணிக்கு மேல் வருகை பதிவு செய்யப்பட மாட்டாது. விற்பனை செய்யவும் அனுமதியில்லை. நாள்தோறும் குலுக்கலில் விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்ட கடைகளில் அமர்ந்து மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். கடைகளை மாற்றி அமர்ந்து விற்பனை செய்யக்கூடாது. கடைகளில் விவசாயி மற்றும் உதவியாளர் மட்டுமே விற்பனை செய்ய அனுமதிக்கப்படுவார்கள். விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை தங்கள் ஒதுக்கீடு பெற்ற கடைகளுக்கு உள் வைத்து விற்பனை செய்ய வேண்டும். தங்கள் கடைகளுக்கு முன்பு வைத்து விற்பனை செய்யக்கூடாது. தங்களின் கடை ஒதுக்கீடு பெற்று விற்பனை செய்யும் விளை பொருட்களை தங்களது ஒரு கடையின் அளவிற்கே தார்பாயில் போட வேண்டும். அதற்கு மேல் தங்களின் காய்கறிகளை பரப்பி அருகில் உள்ள கடைகளை ஆக்கிரமித்து விற்பனை செய்யக்கூடாது. உழவர் சந்தை நிர்வாகம் நிர்ணயித்த விலையை விட தங்கள் விளை பொருட்களை கூடுதல் விலைக்கு அல்லது குறைந்த விலைக்கோ விவசாயிகள் விற்பனை செய்யக்கூடாது.

விற்பனை நிர்ணய விலை பலகையை நுகர்வோர்களுக்கு நன்கு பார்வையில் படும்படி வைத்து விற்பனை செய்ய வேண்டும். விற்பனை நிர்ணய விலை பலகையை மறைக்க கூடாது. நிர்ணய விலையை அழித்து விற்பனை செய்க்கூடாது. விற்பனை செய்யும் விளை பொருட்களின் பெயரை, அதன் விலையை கூவி விற்பனை செய்யக்கூடாது.சந்தை விற்பனை முடிவு நேரமான காலை 11 மணிக்குள் விவசாயிகள் விற்பனையை முடித்து தராசுகளை அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். காலை 11.30 மணிக்கு மேல் உழவர் சந்தையில் எந்த விவசாயிகளும் இருக்க கூடாது. இவ்வாறு வேளாண் அலுவலர் தாமரைச்செல்வன் தெரிவித்துள்ளார்.

**ஆலம்பாடி, திருப்பெயர் கிராமங்களுக்கு மண் பரிசோதனை வாகனம் வருகை விவசாயிகள் பயன்பெற அழைப்பு**

பெரம்பலூர்: ஆலம்பாடி கிராமத்திற்கு இன்றும் (7ம் தேதி), திருப்பெயர் கிராமத்திற்கு நாளையும் (8ம்தேதி) நடமாடும் மண் பரிசோதனை வாகனங்கள் வருவதால் விவசாயிகள் வயலிலுள்ள மண் மாதிரிகளைக் கொடுத்து ஆய்வு செய்து பயிரிட வேண்டுமென வேளாண் அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். இதுகுறித்து பெரம்பலூர் மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (பொ) அய்யா சாமி தெரிவித்திருப்பதாவது: பெரம்பலூர் மாவட்ட வேளாண் துறையின் நடமாடும் மண் பரிசோதனை நிலைய வாகனத்தின் மூலம் கடந்த மே மாதம் 21ம்தேதி முதல் ஜூலை மாதம் 17ம்தேதி வரை 37 கிராமங்களுக்கு சென்று 2,969 மண்மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மண்ஆய்வுக்கு உட்படுத்தபட்ட மண் மாதிரிகள் உடனுக்குடன் மண்ஆய்வு செய்து விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

பயிர் சாகுபடி மேற்கொள்வதற்கு முன் மண்ஆய்வு செய்து சாகுபடி மேற்கொள்வதன் மூலம் பயிருக்குத் தேவையான அளவு உரத்தை மட்டும் இட்டு சாகுபடி செய்வதன்மூலம், உரத்திற்கான செலவினை பெருமளவு குறைக்க வாய்ப்புள்ளது. மேலும் பெரம்பலூர் வட்டாரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடமாடும் மண்ஆய்வு நிலைய வாகனம் மண் மாதிரிகள் ஆய்வு மேற்கொள்ள வருகை தரவுள்ளது. அதன்படி இன்று(7ம்தேதி), ஆலம்பாடி கிராமத்திலும், நாளை(8ம்தேதி) திருப்பெயர் கிராமத்திற்கும் சென்று மண்மாதிரிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. இதனையொட்டி சம்மந்தப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளும் தங்களது வயலில் மண்மாதிரிகள் சேகரித்து மண்ஆய்வுக் கட்டணமாக ரூ.20ஐ செலுத்தி மண் ஆய்வு செய்து கொள்ள வேண்டும். பின்னர் மண்ஆய்வு முடிவுகளின்படி, அதற்கு வேளாண் துறையினர் அளிக்கும் அறிவுரைகளின்படி வயலில் தேனையான உரங்களை அளவோடு இட்டு சாகுபடி மேற்கொண்டு அதிக லாபம் பெற்று பயனடையலாம் எனத் தெரிவித்துள்ளார்.